3rd November 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Permanent rectifications in the alignment of poles were completed on 8th May 1966.

(b) Does not arise.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழில் சொன்னால் புரியும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ஐ ஆம் ஸாரி' தமிழில் கீழே இருக்கிறது. அதைப் பார்க்கவில்லை. இப்பொழுது தமிழில் பதில் சொல்கிறேன்.

(அ) இக்கம்பங்கள் எப்போதும் சாயாமலிருப்பதற்கான நிலை ஏற்பாடுகள் 8-5-1966-ல் செய்து முடிக்கப்பட்டன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 30-4-1966-ல் புயல் அடித்தது. புயல் அடித்து குறைந்தது $1\frac{1}{2}$ மாதங்கள் வரைக்கும் எனது பகுதியிலே கம்பங்கள் நிமிர்த்தப்படவில்லை. கேட்டால் "சொந்தச் செலவில் வேண்டுமானால் நீங்கள் செய்துகொள்ளுங்கள்" என்று பதில் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்தக் கம்பங்களை நிமிர்த்திவிட்டார்கள் என்று சொல்கிறார்களா? நான்காவது மாதத்தில் நடந்த நிகழ்ச்சி. இப்பொழுது கம்பங்கள் நிமிர்த்தப்பட்டுவிட்டன என்று சொன்னால் அதை எப்படி புரிந்து கொள்ள முடியும்? அதே நேரத்தில் இனிமேலாவது அதே மாதிரி தாமதம் இல்லாமல் நடப்பதற்கு வழிவகை செய்வார்களா?

(பதில் இல்லை)

மின்சார வசதி

*352 கேள்வி—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், மரக்காணம் டவுன் பஞ்சாயத்தில் மேற்படியூர் காலனிக்கு 90 தெரு விளக்குகள் போடவேண்டி 25-9-1965-ல் மேற்படி பஞ்சாயத்தால் நிறைவேற்றப்பட்டு மின்சார இலாகா திண்டிவனம் A.E.-க்கு அனுப்பப்பட்ட தீர்மானத்தின்பேரில் இதுவரைக்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததற்கு காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மரக்காணம் நகர பஞ்சாயத்தில் 25 கூடுதல் தெரு விளக்குகளையும் அவ்வூர் காலனிக்கு 10 தெரு விளக்குகளையும் போடுமாறு மரக்காணம் நிர்வாக அதிகாரியிடமிருந்து வேண்டுகோள் வந்தது. தமிழ்நாடு மின்சார போர்டு வகுத்த திட்டத்தின்மூலம் கிடைக்கும் மொத்த லாபம் 10 சதவீதத்துக்குக் குறைவாக இருந்தால், அது லாபமற்ற திட்டமெனத் தெரிய வந்தது. கூடுதல் மின்சார இணைப்புகளைப் பெற

வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் 10 சதவித லாபமாவது கிடைக்கும் என்ற உறுதி ஏற்பட்டவுடன், போர்டு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1961-ல் மரக்காணம் பகுதிக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டது. அதற்குப் பக்கத்தில் உள்ள மீனவர் பகுதியில் மின்சார வசதி கிடையாது என்ற காரணத்திற்காக இந்தக் கேள்வி கேட்டேன். ஆனால் சில கிராமங்களில் லைன் இழுத்திருக்கிறார்கள். இன்னும் பல கிராமங்களில் லைன் இழுக்கவில்லை. 10 சதவிகிதம் லாபம் கிடைக்க வேண்டும் என்று கணக்கு வைத்திருக்கிறார்கள். கணக்கிற்காக சர்க்கார் இருக்கிறதா அல்லது மக்கள் வசதிக்காக சர்க்கார் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லாபம் இல்லாமல் அல்லது கட்டுபடி ஆகாமல் கமர்ஷியல் ஆர்கனைஸேஷன் ஆகிய எலெக்ட்ரிசிடி போர்டு எந்தக் காரியத்தையும் மேற்கொள்ள முடியாது.

* 353 **கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகாவில் மின்சார வசதி தேவை என்று எத்தனை கிராமங்களிலிருந்து அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்துள்ளன ?

(இ) அவைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) விவரங்கள் பின்வருமாறு :—

சிதம்பரம் வட்டத்தில் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை.	321
மனுச்செய்துகொண்ட கிராமங்களின் எண்ணிக்கை.	319
ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை	314
முடிவு செய்யப்பட்டு வருபவை	5
பரிசிலனையின்கீழ் இருப்பவை	2
மின் வசதி அளிக்கப்பட்டவை	93
1966-67-ல் மின் வசதி அளிக்கப்பட விருப்பவை	30
நான்காம் திட்டம் முடிவதற்கு முன் படிப்படியான திட்டத்தின்கீழ் மின்வசதி அளிக்கப்பட்ட எஞ்சியுள்ள கிராமங்கள்.	198